செ. கு. எண்: 162

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 30.6.2013

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பீமசந்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சென்னவீரா ரெட்டி, அவரது மனைவி திருமதி அருணா மகன் சிறுவன் தனுஷ் மற்றும் மகள் சிறுமி திவ்யா ஆகியோர் மீது 15.6.2013 அன்று தேவகானப்பள்ளி என்ற இடம் அருகே உயரழுத்த மின்சார வயர் அறுந்து விழுந்ததன் காரணமாக, மின்சாரம் தாக்கி நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அங்குசெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகன் சிறுவன் விக்டர் 16.6.2013 அன்று பால் வாங்க சென்ற போது அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கியதில் அகால மரணமடைந்த சென்னவீரா ரெட்டி, அருணா, சிறுவன் தனுஷ், சிறுமி திவ்யா மற்றும் சிறுவன் விக்டர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சென்னவீரா ரெட்டி, அருணா, சிறுவன் தனுஷ், சிறுமி திவ்யா மற்றும் சிறுவன் விக்டர் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**